# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.

## PROSECUTION OF WITNESS :

## CC.No. 160/2026

| | | | |
|---|---|---|---|
| NAME | : கோபி | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **08.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused absent**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW– 2 : திரு. கோபி. (காவல் உதவி ஆய்வாளர்)**

நான் தற்போது மாவட்ட தனிப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.05.2025 வருடம் மாலை 15.00 மணிக்கு தருமபுரி தருமபுரி மது விலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் எனக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் நான் மற்றும் தலைமை காவலர்கள் முத்துசாமி மற்றும் கபில்தேவ் ஆகியோர் தொப்பூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட கோம்பை கிராமம் எதிரி வேலுசாமி என்பவர் அவர் வீட்டில் ஒரு பையில் ஏதோ வைத்து கொண்டிருந்தார்ர். எங்களை கண்டவுடன் பார்த்து தப்பித்து ஓட முயற்சித்தார். அவரை பிடித்து விசாரித்தபோது 180 Ml அளவு கொண்ட Jet பிராந்தி 27 பாட்டில்கள் இருந்தது. எதிரியை பிடித்து விசாரிக்கும்போது இருந்து அரசு அனுமதியின்றி மது பானங்களை விறப்னை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். எதிரியை கைது செய்து நிலையபிணையில் விடுவித்தேன். மேற்கண்ட மதுபானங்களை சம்பவ இடத்திலேயே 15.20 மணிக்கு தலைமை காவலர் முத்துசாமி மற்றும் கபில்தேவ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜருடன் கூடிய அழித்தல் மகஜர் தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் அதில் சாட்சியாக இருந்து முத்துசாமி மற்றும் கபில்தேவ் என்பவரும் கையெழுத்திட்டார்கள். தலைமை காவலர்கள்முத்துசாமி மற்றும் கபில்தேவ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கின் எதிரி வேலுசாமி மீது குற்ற வழக்கு எண் 216/2025 பிரிவு 4 (1) C TNP Act பதிவு செய்து குற்ற அறிக்கையினை தாக்கல் செய்தோம். சம்மந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் பிற ஆவணங்களை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். முதல் தகவல் அறிக்கை **அ.சா.2** ஆக குறியிடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

சம்பவ இடத்திற்கு நாங்கள் மாலை 3 மணிக்கு சென்றோம். எதிரி தப்பி ஓடியிருந்தால் பாட்டில்கள் உடைந்திருக்கும் என்றாலும் எதிரி பாட்டில்களை எதையும் வைத்திருக்கவில்லைஎன்றால் சரியல்ல. கைப்பற்றி பாட்டில்களின் எண்களை தனித்தனியாக குறிப்பிடவில்லை என்றால்சரியல்ல. எதிரியின் வீட்டின் கதவு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் வீடு என்பதற்காக பார்வை மகஜர் எதுவும் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுநபர் சாட்சிகள் யாரும் இந்த வழக்கில் இல்லை என்றால் சரிதான். இரசாயன பரிசோதனைக்கு செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக தான் வழக்கு பதிவு செய்துள்ளோம்எ ன்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல. எனவே எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.08 15:28:17 +0530